RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s171

OPEN ACCESS

# அகப் பாடல்களை முன்வைத்து இனக்குழுச் சமூகமும் திருமண முறைகளும்

**பா. அருள்ஜோதி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, வே.வ. வன்னியப்பெருமாள் கல்லூரி, விருதுநகர்-626001, தமிழ்நாடு, இந்தியா

# Ethnic Society and Marriage Patterns on the basis of Akam (Love) Songs

**P. Arul Jothi** [a, *]

[a] Department of Tamil, V.V. Vanniaperumal College for Women, Virudhunagar-626001, Tamil Nadu, India

* Corresponding Author: aruljothi@vvvcollege.org

Received: 09-03-2022
Revised: 25-10-2022
Accepted: 14-11-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

The ancient Tamil people made their living on the basis of the land. The life of the Tamils of the Sangam age is divided into two parts, Akam (Love) and Puram (Social). Akam refers to the events of love life. The early man began to live in groups to protect himself from destruction. It is this system of collective life that later led to the formation of the ethnic society. It is clear that during the Sangam age, the inhabitants were also based on different types of Thinai of Veduvarkudi, Ayarkudi, Kanavarkudi, Bharathavarkudi, and Umanarkudi. The Puram shows the events of life other than love. An ethnic group is characterized by the culture of the people and the language, culture, and tradition of that race. The purpose of this article is to examine the marriage pattern of the ethnic communities in which the diversity of the population lived.

**Keywords:** Ancient Tamil people, Akam, Puram, Thinai, Veduvarkudi, Ayarkudi, Kanavarkudi, Bharathavarkudi, Umanarkudi, Marriage Pattern.

## முன்னுரை

சங்ககாலத் தமிழர்களின் வாழ்க்கை அகம், புறம் என்று இரண்டு கூறுகளாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. அகம் என்பது காதல் வாழ்வியல் நிகழ்ச்சிகளைக் காட்டுகிறது. புறம் என்பது காதலைத் தவிர ஏனைய வாழ்வியல் நிகழ்ச்சிகளையும் காட்டுகிறது. ஒரு இனக்குழுவானது, அவ்வினத்தினுடைய பண்பாடு போற்றியும், மொழி, கலாச்சாரம், பாரம்பரியத்தைப் பறைசாற்றியும் அமையும். 'இனக்குழுவியல் என்பது பண்பாட்டு மானுடவியலின் அடித்தளமாக அமைவது. இது ஓர் இனக்குழு அல்லது ஒரு சமூகத்தைப் பற்றிய விரிவான, முழுவதுமான அறிவினை எடுத்தியம்புகின்றது. பழங்குடிச்சமூகம், கிராமச்சமூகம் முதலான சிறுசிறு சமூகங்களின் இடவியல்பு விளக்கம், மக்களின் உருவத் தோற்றம், வாழிட அமைப்பு, பொருளாதாரம், சமயம், சட்டமுறைகள், தொழில்நுட்பம், கலை மற்றும் பண்பாட்டின் அனைத்துக்கூறுகளையும் தனித்தனியாக ஆராய்ந்து அப்பண்புகளை முறைப்படுத்தி இனக்குழுவியல் விளக்கும் ஒவ்வொரு சமூகத்தின் அக, புறப் பண்பாடுகளை அறிவியல் நோக்கில் இது ஆராயும்' என்றும் விளக்கம் தருகின்றன (Balusamy, 1992).

மனிதனை ஆராயும் அனைத்துத் துறைகளிலும் மானுடவியல் மட்டுமே மனிதனை, அவன் வாழும் இடம் மற்றும் கால நேரப் பரிணாமவெளியில் மனிதனின் இருப்பை ஆய்ந்து முழுமையாக அவனை அறிய முயல்கின்றது.

## திருமண ஏற்பாடும் திருமணச் சடங்குகளும்

ஆணும் பெண்ணும் தனியே சந்தித்தார்கள் அன்பைப் பரிமாறிக் கொண்டனர். வாழ்க்கை உடன்படிக்கைச் செய்து கொள்வர். ஆனால் ஆடவர்களில் சிலர், வாக்குறுதியை மீறினார்கள்.

காதல்மணம் புரிந்த மகளிரைக் கைவிட்டு வேறு பெண்ணை மணம்புரிந்தனர். அவர்கள் ஒழுக்கம் களவொழுக்கமாக இருந்ததால், நான் அந்தப் பெண்ணுடன் வாழவில்லை, அவளை மணம்புரிந்து கொள்ளுவதாகவும் வாக்களிக்கவில்லை என்று பொய்சொல்லவும் தொடங்கினார்கள். இந்நிலைமை ஏற்பட்ட பிறகுதான் பெரியோர்கள் திருமணத்திற்கான சடங்குகள் சிலவற்றை உண்டாக்கினர் என்பர்.

“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப”

என்று தொல்காப்பியம் கூறுகிறது (Subramanian, 2003). ‘களவுக்காதலில் இவனை அறியேன்’ எனப் பொய்கூறலும், வேற்றுவரைவு, இடையில் கைவிடல் முதலான வழுவும் ஏற்பட்டபிறகு, தந்தை தமையன்மார் அகவை முதிர்ந்த சான்றோர் கரணம்’ என நாடு அறியும் படியான மணச்சடங்குகளை வகுத்தனர். மணமானவளை மணம் ஆகாதவளோ என எண்ணி, ஓர் ஆடவன் காமத்துடன் பார்ப்பதைத் தாலி முதலான அடையாளம் தடுக்கும். இன்றேல், மணமானவளைக் காதலிக்கவும், மணம் பேசவுமான பொய்யும் வழுவும் தோன்றும். கரணமும் அதன்வழி மணமானவரை ஆகாதவர் நின்றும் வேறுபடுத்தும் அடையாளங்களும் சமுதாயப் பெரியோர்களால் வகுக்கப் பெற்றுள்ளன” என்பர்.

திருமணம்பேச முதியோர் செல்லுதல் பண்டையவழக்கம். நன்னிமித்தம் பார்த்து, திங்களுடன் உரோகிணி சேர்ந்த நன்னாளில், விடியற்காலையில், மனையை அணி செய்து, விளக்கேற்றி, மாலைகளைத் தொங்கவிட்டனர். உளுந்து பெய்த கொழுந்துவை அடிசிலாகக் கொடுக்கப்பட்டது. மணமுழவும், முரசம், சங்கும் ஒலிக்கத் தலைவிக்கு மண நீராட்டினர். வாகை இலையோடு அறுகம்புல்லின் கிழங்குமுளையைச் சேர்த்துக் கட்டிய நூலைச் சூட்டினர். உச்சந்தலையில் குடமும் கையகத்தே மண்கலமும் உடைய முதிய மங்கல மகளிர் மணத்தை நிகழ்த்தினர். மக்கட்பேறு வாய்ந்த மகளிர் நால்வர்கூடிக் கற்பு வழாமல் நல்ல அறம் பல செய்கவென கொழுநனைப் பேணி ஒழுகத்தக்க வாழ்க்கைத் துணையாகுக என மணப்பெண்ணை வாழ்த்தினர். கூந்தல்மேல் பெருமக்கள் மலரும் நெல்லும் சொரிந்தனர். பின்னர்ப் பெற்றோர் மணமகளைத் தலைவனிடம் தந்தனர். அன்றே கணவனும் மனைவியும் தனித்திருந்து வாழ்க்கை நடத்தினர். தமிழர்களின் திருமணம் எப்படி நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதை சங்கஇலக்கிய “அகநானூற்றில்” இடம்பெற்ற 8ஆவது பாடலில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

இறைச்சியுடன் கூட்டி ஆக்கிய நெய் மிக்க வெண்சோறு படைக்கப்பட்டது. புட்சகுனம் பார்த்துத் திங்கள் உரோகிணியோடு கூடிய நன்னாளில் மனையை அழகுபடுத்தியுள்ளனர். கடவுளை வழிபட்டு, ஒலிக்கும் மணமுழவுடன் பெண்ணுக்கு வதுவை நீராட்டை நிகழ்த்தினர். தூய ஆடையை அணிவித்தனர். மணல் நிறைந்த பந்தலில் நகை அணிந்ததனால் தோன்றிய வியர்வையை ஆற்றினர். தலைவியினுடைய பெற்றோர் அவளைத் தலைவனுக்குக் கொடுத்தனர் என்று அகநானூற்றில் பாடல் தெளிவுறக் குறிப்பிடுகிறது.

## அறநூலும் திருமணமும்

களவில் காதலர்கள் கூடுதல் ஒரு மணம் எனச் சங்கக்காலத்து மக்கள் நம்பினார்கள். இதனை அக்கால அறநூலும் கூறியுள்ளது. இதனை சங்க அகஇலக்கியத் தலைவனின் கூற்று மூலம் அறியமுடிகின்றது. மாசற்ற மதிபோல் விளங்கும் முகத்தினை உடைய மகளிரை வலிந்து கூடுதல் ஒரு மணம் என அறநூல் கூறுகின்றது என்று தலைவன் கூறுவதைப் பின்வரும் பாடலடிகள் காட்டுகின்றன.

“மையில் மதியின் விளங்கும் முகத்தாரை

வௌவிக் கொளலும் அறன் 'எனக் கண்டுன்று”

என்ற பாடலில், களவில் கூடுவது ஒரு மணம் என முல்லை நில மக்களும் நம்பினார்கள். தலைவி இதனைத் தோழியிடம் கூறுவதை முல்லைக்கலிப் பாடல் ஒன்று காட்டுகிறது (Stephen, 2004). "அவனொடு கூடிய அன்றே ஒரு மணம் முடிந்துவிட்டது என்பதை நம்முடைய நெஞ்சுதான் அறியும்" என்று தலைவி கூறுவதை,

"திருநுதல் ஆயத்தார் தம்முள் புணர்ந்த

ஒருமணந் தான்"

என வரும் பாடலடிகள் சுடுகின்றன (Stephen, 2004).

## தலைவன் மணம் பேச வருதல்

ஓர் ஆண்மகன் தான் காதலித்த பெண்ணின் வீட்டுக்கு வந்து அவள் பெற்றோரிடம் திருமணம் பற்றி பேசும் வழக்கம் சங்கத்தமிழ் மக்களிடம் இருந்தது என்பதை சங்க அக இலக்கியத்தில்காண முடிகின்றது. தலைவன் மணம்பேசத் தலைவி வீட்டுக்கு வந்தான் என்பதையும் தலைவி பெற்றோர் திருமணத்துக்கு இசைந்தனர் என்பதையும்,

"நம் உறைவரைந்தனர், அவர் உவக்கும் நாளே"

எனும் பாடலடிகள் சுட்டிக்காட்டுகின்றன (Stephen, 2004).

## தலைவன் சோதிடரைப் பார்த்துப் பெண் கேட்டு வருதல்

மணநாள் குறிப்பதில் தேர்ந்த சோதிடரையும் தகை மிக்கவரும் தொகை வகை அறிந்தவருமான பெருமைமிக்க சான்றோர்களையும் அழைத்துக்கொண்டு தலைவன் பெண் கேட்டு வரும் பழக்கம் குறிஞ்சி நிலத்தில் இருந்தது என்பதை,

"நெறியறி செறிகுறி புரிதிரிபு அறியா அறிவனை முந்துறீஇத்

தகைமிகு தொகைவகை அறியும் சான்றவர் இனமாக

சேய்உயர் வெற்பனும் வந்தனன்"

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன (Stephen, 2004). வேங்கை மரத்தின் கீழ்த் திருமண முடிவு எடுத்தல், சங்ககாலத்தில் தலைவன் பெண்கேட்டு வந்தபோது மணமிக்க வேங்கை மரத்தின் கீழ் அமர்ந்துகொண்டு பேசியுள்ளனர். அப்போது தலைவியின் தந்தை தலைவனுக்குத் தன் மகளை மணம் செய்து தருவார் என்று கூறிய செய்தியை,

"மென்தோள் கிழவனும் வந்தனன் நுந்தையும்

மன்றல் வேங்கைக் கீழ் இருந்து

மணம்நயத்தனன், அம் மலைகிழவோற்கே"

என்ற சங்கஇலக்கியப் பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது (Stephen, 2004).

## திருமணம் நிகழும் இடம்

சங்ககாலத்தில் குறிஞ்சித்திணையில் புனத்தில் உள்ள வேங்கைப்பூவின் தாது வீழ்ந்து கிடக்கும் முற்றத்து வெளியில் திருமணம் நிகழ்ந்தது. இதனைப் பின்வரும் குறிஞ்சிக்கலிப் பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது.

"புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றில்

நனவிற் புணர்ச்சி நடக்குமாம்" (Stephen, 2004)

## திருமணக்கோலமும் திருமணமும்

சங்ககாலத்தில் ஆண்மகன் பெண் கேட்க வந்தபின் திருமணம் நிகழ்ந்துள்ளது. திருமணத்தில் ஆணும் பெண்ணும் திருமணக்கோலத்தில் வந்துள்ளனர். மணமகள் மணமகனின் பக்கத்தில் நாணத்துடன் வந்து அமர்ந்து கொண்டதை சங்க அகஇலக்கியப் பாடலடிகள் சுட்டுகின்றன.

"புதுவை போலும் நின் வரவும் இவள்

வதுவை நாண் ஒதுக்கமும், காண்குவல், யானே" (Stephen, 2004)

## திருமண ஏற்பாடு மணல் பரப்புதல்

சங்ககால மக்கள் மணலைக் கீழே கொட்டிப்பரப்ப, வீட்டுக்குச் செம்மண்பூசி, தெய்வமாக வைத்த எருமைப்பேட்டின் கொம்போடு பெண்ணின் சுற்றத்தார் பெருமணம் செய்தனர். தலைவியின் பெற்றோர் செய்யும் திருமணஏற்பாடுகளைத் தலைவி தோழியிடம் எடுத்துக் கூறுவதைப் பின்வரும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

"தருமணல் தாழப்பெய்து இல்பூவல் ஊட்டி

எருமைப் பயோடு எமர் ஈங்கு அயரும்

பெருமணம் எல்லாம்" (Sivasubramanian, 2005)

## திரையிட்டுத் திருமணம் நிகழ்தல்

சங்ககால மக்கள் அகன்ற முற்றத்தில் புதுமணலைப் பரப்பினார்கள். பிறகு திரையிட்டுத் திருமணம் செய்தார்கள். இந்தச் செய்தி தோழி தலைவியிடம் எடுத்துக் கூறுவதை முல்லைக்கலியில் காணமுடிகின்றது.

"வரைப்பில் மணல் தாழப் பெய்து திரைப்பில்

வதுவையும் ஈங்கே அயர்ப"

என்ற பாடலில், தீயை வலம் வந்து திருமணம் நிகழ்ந்தமுறை சங்ககாலத்தில் ஆரிய வழக்கம் தமிழர் பண்பாட்டிற்குள் செல்வாக்கு பெற்றதைக் குறிப்பிடுகிறது எனலாம் (Sivasubramanian, 2005). திருமணநாளன்று காதலி நாணத்தால் ஆடைக்குள் ஒடுங்கித் தலைகவிழ்ந்து வர, வேதம் ஓதும் அந்தணன் வலம்வரச் சொல்ல, காதலர்கள் தீவலம் வந்த செய்தியைச் சங்கப்புலவர்கள் பாடியுள்ளனர் என்பதைப் பின்வரும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

"காதல்கொள் வதுவை நாள் கலிங்கத்துள் ஒடுங்கிய

மாதர்கொள் மான்நோக்கின் மடுந்தைதன் துணையாக

ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான் போல" (Muthukalakkumi, 2005)

## சாதி வேறுபாடும் திருமணமும்

சங்ககாலத் தமிழ் மக்களுக்கிடையே சாதிவேறுபாடு இருந்தமை சங்கப்பாடல்களில் பரவலாகக் காணப்படுகின்றன. முல்லைநிலத்து மக்களுள் புல்லினத்து ஆயர்மக்களும், நல்லினத்து ஆயர்மக்களும் என இருவகைச் சாதிகள் இருந்துள்ளனர். புல்லினத்து ஆயர் ஆடினத்தை வளர்த்துள்ளனர். ஆனால் நல்லினத்து ஆயர்கள் பசுக்களை வளர்த்துள்ளனர். இதனை ஒரு முல்லைக்கலிப் பாடல் காட்டுகிறது.

"புல்லினத்து ஆயனை நீஆயின் குடுஞ்சுட்டு

நல்லினத்து ஆயர் எமர்"

என வரும் பாடலில், முல்லைநிலத்துத் தலைவியும் தலைவனும் காதல் கொள்கின்றனர் (Muthukalakkumi, 2005). ஆனால் அன்னை என்ன சொல்லுவாள் என்று தலைவிக்குப் பயம். அவன் ஆயர் மகன். நீ அவனை விரும்புகிறாய், அவன் உன்னை விரும்புகிறான். பின்னர் அன்னை நொந்து கொள்வதற்கு ஒன்றுமில்லை என்று தோழி கூறுவதை முல்லைக்கலிப் பாடல் தெளிவுறச் சுட்டுகின்றது.

"ஆயர் மகனாயின் ஆயமகள் நீயாயின்

நின் வெய்ய னாயின் அவன் வெய்யை நீ ஆயின்

அன்னை நோதக்கதோ இல்லைமன்"

என்ற மேற்கூறிய பாடலடி, சங்ககாலத்தில் சாதிவேறுபாடும், ஏற்றத்தாழ்வும் இருந்துள்ளதையும் அவை மணவுறவுக்குத் தடையாக இருந்துள்ளதையும் அறிய முடிகிறது (Bhakthavatsala Bharathi, 2011).

## முடிவுரை

தலைவன் தலைவியின் திருமணவாழ்வு மணமொத்த நம்பிக்கையின் அடிப்படையில் ஆன்றோர் சான்றோர் முன்னிலையிலும், ஊரும் உறவும் மறுப்புத் தெரிவித்த நிலையில் உடன்போக்கின் அடிப்படையிலும் நிகழ்ந்துள்ளது. திருமணத்தில் 'தாலி' போன்ற எந்தவித அடையாளங்களும் பண்டைத்தமிழர் பண்பாட்டில் இல்லை. திருமணத்தில் இணையும் தலைவன் தலைவி நம்பிக்கையின் அடிப்படையில்தான் இல்லற வாழ்க்கையை மேற்கொண்டனர். சங்க அகஇலக்கியங்களில் பண்டைத்தமிழரின் திருமணம் பற்றிய குறிப்புகளும், அதுசார்ந்த சடங்குகளும், அது தொடர்பான ஏற்பாடுகளும் தெளிவுறப் பதிவு செய்யப்படுள்ளது. வேங்கைமரத்தின் கீழ்நின்று திருமண முடிவு செய்தலும், திரையிட்டுத் திருமணம் நடத்தப்பெறுதலும் போன்ற பல்வேறு பண்பாட்டுக்கூறுகள் தொல்தமிழர் அகவாழ்வில் இருந்த ஆகச்சிறந்த வாழ்வியல் தெளிவை விளக்கும் விதமாக உள்ளன.

## References


Balusamy, N. (1992), Vazhviyal Kalanjiyam, volume 12, Tamil University, Thanjavur, India.

Bhakthavatsala Bharathi, S. (2011) Panpaattu Manudaviyal, Meiyappan Pathipagam, Chennai, India.

Muthukalakkumi, (2005) Pandaiya Tamil Ilakkiyangalil Aranerigal, Anitha Pathippagam, Trichy, India.

Sivasubramanian, A. (2005) Inavaraiviyalum Tamil Novelum, Parisal Veeliyeedu, Chennai, India.

Subramanian, S.V. (2003) Tholkaapiyam Thelivurai, Manivasagar Pathippagam, Chennai, India.

Stephen, G. (2004) Ilakkiya Inavaraiviyal, New Century Book House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License